

தலைசிறந்த மூன்றாண்டு தலைநிமிர்ந்த தமிழ்நாடு
வாய்மையே வெல்லும்
மக்கள் போற்றும் நல்லாட்சி
மகத்தான திட்டங்கள் சாட்சி
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
பெருநகர சென்னை மாநகராட்சி
பெருநகர சென்னை மாநகராட்சி
GREATER CHENNAI CORPORATION



சென்னை நிலமாக மட்டுமல்ல,
இந்த நிலத்தின் மீது வாழும்
ஒவ்வொரு மனிதரின்
உயிராகவும் இருக்கிறது.

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.07.2023 அன்று ஸ்டீபன்சன் சாலையில் செங்கை சிவம் உயர்மட்டப் பாலத்தைத் திறந்து வைத்தார்.



# 1

# பாலங்கள்

## ரூ. 231.95 கோடி மதிப்பில் 9 புதிய பாலங்கள்

- கொளத்தூர் வில்லிவாக்கம் எல்.சி.1 இரயில்வே சந்திக்கடவில் மேயர் சிட்டிபாபு பாலம்,
- மாம்பலம் இரயில் நிலையம் முதல் தியாகராய நகர் பேருந்து நிலையம் வரை ஆகாய நடைமேம்பாலம்,
- ஸ்டீபன்சன் சாலையில் செங்கை சிவம் பாலம்,
- ஓட்டேரி நல்லாவின் குறுக்கே ஆஸ்பிரன் கார்டன் பகுதியில் புதிய பாலம்,
- புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே ஆமுல்லவாயலில் பாலம்,
- பர்மா நகரில் பாலம்,
- நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையின் குறுக்கே நடைமேம்பாலம்,
- கூவம் ஆற்றின் குறுக்கே அருணாச்சலம் சாலையில் கூடுதல் பாலம்
- யானை கவுனி மேம்பாலம்



செங்கை சிவம் பாலம்



தியாகராய நகர் ஆகாய நடைமேம்பாலம்





யானை கவுனி மேம்பாலம்



ஆஸ்பிரன் கார்டன் பாலம்



அருணாச்சலம் சாலையில் பாலம்





மேயர் சிட்டி பாபு மேம்பாலம்



தெற்கு உஸ்மான் சாலை மற்றும்
சிஐடி நகர் சாலையில் உயர்மட்டப் பாலம்





கணேசபுரம் சுரங்கப்பாதையில் உயர்மட்டப் பாலம்





கூவம் ஆற்றின் குறுக்கே சின்ன நொளம்பூரில் கட்டப்பட்டு வரும் பாலம்



கூவம் ஆற்றின் குறுக்கே சின்ன நொளம்பூர் மற்றும்
சன்னதி தெருவில் 2 பாலப் பணிகள் தொடக்கம்

## ரூ.646.83 கோடி மதிப்பில் நடைபெறும் 11 பாலப் பணிகள்

- கணேசபுரம் சுரங்கப்பாதையில் உயர்மட்டப் பாலம்,
- தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சிஐடி நகர் சாலையில் உயர்மட்டப் பாலம்,
- மணலி சாலை இரயில்வே சந்திக்கடவு 2பி-ல் உயர்மட்டப் பாலம்,
- கூவம் ஆற்றின் குறுக்கே சின்ன நொளம்பூர் மற்றும் சன்னதி முதல் குறுக்குத் தெருவில் 2 பாலங்கள்
- புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கத்தில் பாலம்,
- ஆதம்பாக்கம் ஏரியின் குறுக்கே ஜீவன் நகர் 2வது தெருவில் பாலம்,
- தொல்காப்பிய பூங்காவில் ஆகாய நடைபாதை பாலம்,
- டி.ஜி.எஸ். தினகரன் சாலையின் குறுக்கே பெட்டக வடிவப் பாலம்,
- அம்பத்தூர் LC-6 இரயில்வே இருசக்கர வாகன சுரங்கப்பாதை மற்றும் இரயில்வே காலனியில் வாகன பாலம்,
- போஜராஜா நகர்-இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகனச் சுரங்கப்பாதை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.09.2023 அன்று ராம் நகரில் நடைபெற்ற சாலைப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# 2

# சாலைகள்

- ரூ.1330.44 கோடி மதிப்பில் 2068.22 கி.மீ நீளத்திற்கு 11980 பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ரூ.146.83 கோடி மதிப்பில் 172.44 கி.மீ நீளத்திற்கு 867 சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மேலும் ரூ.223.17 கோடி மதிப்பில் 291.45 கி.மீ நீளத்திற்கு 1719 சாலைகள் அமைக்கும் பணி பல்வேறு திட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.










மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அசோக் நகர், 4ஆவது நிழற்சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை 03.08.2023 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



# 3

# மழைநீர் வடிகால் பணிகள்

- பெருநகர சென்னை மாநகராட்சியில் 3040 கி.மீ. நீளத்திற்கு 11,770 மழைநீர்வடிகால்களும், 53.42 கி.மீ. நீளத்திற்கு 33 கால்வாய்களும் பராமரிக்கப்பட்டு வருகிறது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ரூ.2300 கோடி மதிப்பில் 586.91 கி.மீ. நீளத்திலும்,
- கோவளம் வடிநிலப்பகுதியில் ரூ.368 கோடி மதிப்பில் 130.84 கி.மீ. நீளத்திலும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிகள் மற்றும் கால்வாய்களில் வெள்ள தடுப்புசுவர் அமைக்கும் பணிகளும் முடிவடைந்துள்ளன.
- மாநகராட்சிப் பகுதிகளில் விடுபட்ட இடங்களில் ரூ.729.56 கோடி மதிப்பில் 233.85 கி.மீ நீளத்திலான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.
- ரூ. 58.33 கோடி மதிப்பில் கடப்பாக்கம் ஏரி புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திரு.வி.க.நகர், பல்லவன் சாலையில் மழைநீர் வடிகால் பணியினை 30.08.2023 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.








## வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள்








பேப்பர் மில்ஸ் சாலையில் மழைநீர் வடிகால் பணிகள்



கொளத்தூர்
திருவீதியம்மன் குளம் பூங்கா



# 4

## நீர்நிலைகளை புனரமைத்தல்

ரூ.37.11 கோடி மதிப்பில் 41 நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



டி.என்.பி.காலனியில் உள்ள
சிவா விஷ்ணு குளம்

சோழிங்கநல்லூர் மண்டலம், புறா குளம்





மேயர் சிட்டி பாபு பூங்கா குளம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.08.2024 அன்று நவீன மீன் அங்காடியினை திறந்து வைத்தார்.



# 5

## நவீன மீன் அங்காடி

பட்டினப்பாக்கம் லூப் சாலையில் ரூ.14.93 கோடி மதிப்பில் 8088 சதுர மீட்டர் பரப்பளவில் 360 கடைகள் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய நவீன மீன் அங்காடி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மீன் அங்காடியில் 116 இருசக்கர வாகனங்கள், 64 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.







**மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் 05.02.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முடிவுற்றத் திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**



# 6
# கட்டடங்கள்

## ரூ. 232.26 கோடி மதிப்பில் புதிய கட்டமைப்புகள்

- 162 நகர்ப்புர நலவாழ்வு மையங்கள்,
- 16 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள்,
- 2 நகர்ப்புர சமூக சுகாதார நிலையங்கள்,
- 9 இரவு தங்குமிடங்கள்,
- தொழில்துறை பயிற்சி நிறுவனக் கட்டடம்,
- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்பு அறை,
- 28 பள்ளிக் கட்டடங்கள்,
- 5 லாரி நிலையங்கள் மேம்படுத்தும் பணி,
- கலை மற்றும் கலாச்சாரக் கட்டடம்,
- ஆடு இறைச்சிக் கூடம்,
- 39 மயான பூமிகளில் மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட 258 கட்டமைப்புகள்
- ரூ 32.62 கோடி மதிப்பில் விக்டோரியா பொது அரங்கம் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது



**மணிகண்டன் தெரு, சென்னை உயர்நிலை மற்றும் தொடக்கப்பள்ளி**

**எம்.சி. (மோனிகர் சௌல்ட்ரி) சாலையில் நடைபாதை வளாகம் அமைக்கும் பணி**






**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்**
**30.08.2023 அன்று கொளத்தூரில் 5 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்களுக்கு அடிக்கல் நாட்டினார்.**



# 7

# பூங்காக்கள்

ரூ.72.16 கோடி மதிப்பில் 139 பூங்காக்கள், 57 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 122 பூங்காக்கள் மற்றும் 57 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரத்தை அழகுபடுத்தவும், பசுமைப் பரப்பை அதிகரிக்கவும் குடியிருப்பு நலச் சங்கங்களுடன் இணைந்து 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.



**பைகிராப்ட்ஸ் பூங்கா**



**கௌதமபுரம் அடுக்குமாடி குடியிருப்புப் பூங்கா**



**மின்ட் பூங்கா**





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், திரு.வி.க.நகர் பல்லவன் சாலையில் ரூ. 3.30 கோடி மதிப்பில் கால்பந்து விளையாட்டுத் திடலை 20.10.2023 அன்று திறந்து வைத்தார்



# 8

# விளையாட்டுத் திடல்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி 264 குழந்தைகள் விளையாட்டு மைதானங்கள், 234 விளையாட்டு மைதானங்கள் என மொத்தம் 498 விளையாட்டு மைதானங்களை பராமரித்து வருகிறது. இதில், கால்பந்து, பூப்பந்து, கைப்பந்து, கூடைப்பந்து, கபடி, உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல் குளங்கள், சறுக்கு மைதானங்கள், ஃபுட்சல் கோர்ட், குத்துச்சண்டை மைதானங்கள் அடங்கும். மேலும், ஹாக்கி, கிரிக்கெட் ஆடுகளங்களும் அமைக்கப்பட்டுள்ளது

சிங்கார சென்னை திட்டத்தின் (2021-24) கீழ் ரூ.45.36 கோடி மதிப்பில் 88 விளையாட்டு மைதானங்களுக்கான பணிகள் முடிவடைந்துள்ளன, 18 விளையாட்டு மைதானங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



கிரிக்கெட் பயிற்சி தொடக்கம்



மாதவரம் மண்டலம்,
வீட்டு வசதி குடியிருப்பு விளையாட்டுத் திடல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.04.2023 அன்று கொளத்தூர் அகரத்தில் சுகாதார மற்றும் நகர்ப்புர நல்வாழ்வு மையத்தை திறந்து வைத்தார்.



# 9

# பொதுசுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC), 16 நகர்ப்புர சமூக சுகாதார மையங்கள் (UCHC), 140 நகர்ப்புர சுகாதார மற்றும் நலவாழ்வு மையங்கள் (HWC), 3 அவசரகால மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவற்றின் மூலம் சுகாதார சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனைகளின் மூலம் 44.23 கோடி புறநோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், 77,84,143 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய்களுக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, 6,69,941 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்த நோய், 4,00,631 நபர்களுக்கு சர்க்கரை நோய் மற்றும் 3,29,111 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.








மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில்,
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
25.08.2024 அன்று "நம்ம மெரினா, நம்ம பெருமை" என்ற விழிப்புணர்வு இயக்கத்தினைத் தொடங்கி வைத்தார்.



# 10

## திடக்கழிவு மேலாண்மை

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு குவிந்துள்ள திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து **(Bio-Mining)** பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் பணி ரூ.350.65 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. இதுவரை மொத்த அளவான 34.28 இலட்சம் கனமீட்டரில் சுமார் 27 இலட்சம் கனமீட்டர் குப்பை அகழ்ந்தெடுக்கப்பட்டு பிரித்தெடுக்கும் பணிகள் 84% முடிவுற்றுள்ளது.

கொடுங்கையூர் குப்பைக் கிடங்கில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை ரூ.648.38 கோடி மதிப்பில் பயோமைனிங் முறையில் பிரித்தெடுக்கும் பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.





பெருங்குடியில்
குப்பைகளை பிரித்தெடுத்தல்






திடக்கழிவுகளை வீட்டுக்கு வீடு திறம்பட சேகரிப்பதற்காக ரூ42.38 கோடி மதிப்பில் லித்தியம் அயன் பேட்டரியுடன் கூடிய 1,684 பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள், ரூ.8.60 கோடி மதிப்பில் 1,100 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3,850 உலோகக் குப்பைத் தொட்டிகள், ரூ.1.72 கோடி மதிப்பில் வீடுகள்தோறும் குப்பைகளை தரம் பிரித்தெடுப்பதற்காக 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட 10,000 எல்.எல்.டி.பி.இ. குப்பைத் தொட்டிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மணலி மண்டலம், மாதவரத்தில் நாளொன்றுக்கு 100 டன் ஈரக்கழிவுகள் கொண்டு இயற்கை உயிரி எரிவாயு (பயோ-சி.என்.ஜி.) நிலையம் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மணலி மண்டலம், சின்ன சேக்காட்டில் பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் எரிபொருள் தயாரிக்கும் ஆலை நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.


மாதவரம்
உயிரி எரிவாயு நிலையம்






# 11

## இயந்திரப் பொறியியல் துறை

- ரூ.36.52 கோடி மதிப்பில் 59 கனரக காம்பாக்டர் வாகனங்கள், 30 இலகுரக காம்பாக்டர் வாகனங்கள்
- ரூ.39.57 கோடி மதிப்பில் 2,034 பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள்
- ரூ.4.37 கோடி மதிப்பில் பெண்களுக்கு 15 நடமாடும் கழிப்பறைகள்
- ரூ.1.78 கோடி மதிப்பில் 6 நாய் பிடிக்கும் வாகனங்கள், 5 கால்நடைகள் பிடிக்கும் வாகனங்கள்
- ரூ.87 இலட்சம் மதிப்பில் 3 ஹைட்ராலிக் மரக்கிளை நீக்கும் இயந்திரங்கள்
- ரூ.22.80 கோடி மதிப்பீல் நீர் நிலைகளை தூர்வாரும் 2 ரோபோடிக் இயந்திரங்கள்.
- ரூ.48 இலட்சம் மதிப்பில் 3 அதிநவீன கடற்கரை ரோந்து மோட்டார் வாகனங்கள்.












# 12

## கல்வித்துறை

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது 1 முதல் 15 வரையுள்ள மண்டலங்களில் உள்ள 356 பள்ளிகளில் பயிலும் 65, 013 மாணவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

வருடத்திற்கு ரூ.1 கோடி மதிப்பில் 11ஆம் வகுப்பு பயிலும் 36 மாணவர்கள், 12ஆம் வகுப்பு பயிலும் 35 மாணவர்கள் மொத்தம் 71 மாணவர்கள் போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில் நேரடியாகவும், இணையதளம் வாயிலாகவும் பயிற்சிகள் அளிப்பதற்காக உண்டு உறைவிட மாதிரிப் பள்ளி (STEM ACADEMY OF EXCELLENCE) தொடங்கப்பட்டுள்ளது.

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 62 மாணவர்கள் பல்வேறு பாடங்களில் 71 நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றதற்காக ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.10,000/- வீதம் ரூ.7.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

12ஆம் வகுப்பு பயின்ற 259 மாணவர்களுக்கு மேற்படிப்பு தொடர்வதற்காக ரூ. 49 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.










ரூ.15 கோடி மதிப்பில் 15,000 மாணவர்களுக்கு சாய்வு மேசை, ரூ.1.50 கோடி மதிப்பில் 2,000 ஆசிரியர்களுக்கு ICT பயிற்சி, 38 சென்னை உயர்நிலைப்பள்ளி மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகளில் இணைய தள இணைப்பு (Internet Connection), ரூ.20 இலட்சம் மதிப்பில் 281 சென்னை தொடக்க/ நடுநிலை / உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் விதமாக கண்காட்சிகள், 60 பள்ளிகளுக்கு மாண்டிசோரி உபகரணங்கள் மற்றும் 75 ஆசிரியர்களுக்கு மாண்டிசோரி பயிற்சி, சிட்டிஸ் (CITIS) திட்டத்தின்கீழ், ரூ.59 இலட்சம் மதிப்பில் School Management System (SMS), Learning Resources Repository Management System (LRRMS) மற்றும் ரூ.2.45 கோடி மதிப்பில் School Leadership Development & Transformation (SLDT) சென்னை பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள் மற்றும் மூத்த ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ மேம்பாட்டிற்கான பயிற்சி,

நிர்பயா நிதியின் கீழ், சானிட்டரி நாப்கின்ஸ் வழங்கும் திட்டத்தில் ரூ.4.79 கோடி மதிப்பில் சென்னை பள்ளி மாணவிகளுக்கு சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ரூ.4.03 கோடி மதிப்பில் பாலின நிகர் மேம்பாட்டு பணிகள், ரூ.18.87 கோடி மதிப்பில் சென்னை பள்ளியின் கழிப்பறைகளை மேம்படுத்தும் பணிகள், ரூ.4.06 கோடி மதிப்பில் 17 பள்ளிகளில் விளையாட்டுத் திடல்கள்/மைதானம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.







சென்னை பள்ளிகளில் பயிலும் தேசிய மாணவர் படை மற்றும் சாரணர் படை மாணவர்களுக்கு சீருடைகள் வழங்குதல்




10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தொடர்ந்து சென்னை மேல்நிலைப்பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான கல்விச்சுற்றுலா



சீர்மிகு வகுப்பறை

பெருநகர சென்னை மாநகராட்சியின் சமுதாயக் கல்லூரிகளின் வாயிலாக மகளிருக்கு தையல் பயிற்சி, கணினிப் பயிற்சி உள்ளிட்ட தொழில் பயிற்சிகள்





மாணவிகளுக்கு தற்காப்புக் கலை பயிற்சி



சென்னை பள்ளிகளின் மாணவர்களுக்கு கிரிக்கெட் பயிற்சி





சென்னை பள்ளிகளின் மாணவர்களுக்கு கால்பந்தாட்டப் பயிற்சி






# 13

# பொதுத்துறை




கடந்த 2021 ஆண்டு முதல் 2024 வரை 847 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 01.01.2021 முதல் 31.08.2024 வரை முதல்வரின் முகவரி துறையின் மூலம் 75,029 மனுக்கள் பெறப்பட்டு, 69,326 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 05.01.2024 முதல் 31.08.2024 வரை முதல்வர் முகாம் மூலம் 3,176 மனுக்கள் பெறப்பட்டு, 2,789 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.





# 14

## முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை

சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டுப்பாட்டு மையக் கட்டடத்தின் வடிவமைப்பு பாரம்பரிய ரிப்பன் கட்டடத்துடன் பொருந்தும் வகையிலும், LEED மற்றும் IGBC அமைப்புகளின் அதிக மதிப்பீடுகளை பெறும் வகையில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு ஏற்ற வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், ரிப்பன் கட்டட வளாகத்திற்குள் உள்ள அனைத்து முக்கிய கட்டடங்களையம் இணைக்கும் வகையில் ஆகாய நடைபாதையும் **(Skywalk)** கட்டப்பட்டுள்ளது.

இந்திய பசுமைக் கட்டட கவுன்சில் **(IGBC)** இக்கட்டடத்திற்கு 21.11.2023 அன்று இந்திய அளவில் அரசு கட்டடங்களில் அதிக மதிப்பெண் வழங்கி கௌரவித்துள்ளது.








முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை
100